# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093699

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 04/2021 Date: நாள் 23/02/2021

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.

(ii) Act சட்டம்: PC Act. Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 17.02.2021 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.00 Hrs Time to : நேரம் வரை 23.02.2021/14.00 Hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.02.2021 Time : நேரம் 18.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 19.30 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்துமூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 65 km வடமேற்கே,

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மயிலாடுதுறை கோட்டாட்சியர் அலுவலகம் மயிலாடுதுறை மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. K. மனோகரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. கருப்புசாமி.

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 57/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியா (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் கூடுதல் இயக்குநர் (ஓய்வு) [illegible] [illegible] (g) Address : முகவரி No: 11, பார்வதியம்மன் கோவில் தெரு [illegible] மயிலாடுதுறை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை கோட்டாட்சியர் / RDO வின் PA திரு. [illegible].

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 23.02.2021 ஆம் தேதி மாலை 18.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் அலுவலகத்திலிருந்த போது திரு.K.மனோகரன், வயது.57/2021, த/பெ.குப்புசாமி, 11, பார்வதியம்மன் கோயில் தெரு, பொறையார், மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் பின்வருமாறு:- தேதி : 23.02.2021 அனுப்புதல் K.மனோகரன், த/பெ.குப்புசாமி, 11, பார்வதியம்மன் கோயில் தெரு, பொறையார், மயிலாடுதுறை மாவட்டம். பெறுதல் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், நாகப்பட்டினம். ஐயா, நான் பொறையார் பார்வதியம்மன் கோயில்தெருவில் என் மனைவியுடன் வசித்து வருகிறேன். நான் பழைய வீடுகளை வாங்கி உடைத்து அதிலுள்ள பொருட்களை விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். நான் தரங்கம்பாடி தாலுக்கா பொறையார் கிராமம் புல எண் 111A/3A(புதிய எண் 639/28)ல் 4 ½ சென்ட் நிலத்தை பாலகுரு செட்டியாரிடமிருந்து 2014ல் வாங்கினேன். மேற்படி இடம் கிராம கணக்கில் நத்தம் காலிமனை என்று இருந்ததால் அந்த இடத்தை திருத்தம் செய்து எனது பெயரில் உட்பிரிவு பட்டா வழங்கக்கோரி கடந்த 29.8.2019-ந் தேதி தரங்கம்பாடி தாலுக்கா ஆபிஸில் மனுக்கொடுத்தேன். எனது இடத்தை மயிலாடுதுறை RDO அவர்களும் நேரில் வந்து பார்வையிட்டார். அதன்பிறகு எனது பெயரில் உட்பிரிவு பட்டா மாற்றம் செய்வது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ......—............ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................—..............on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..............—...... பதவி .........—........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..................—.............. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.மனோகரன்
23/2/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
23/02/2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. ARUPRIYA.
Rank: நிலை Inspector of Police No. எண்
VSAC, Nagapattinam.

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-**

தொடர்பாக பலமுறை மயிலாடுதுறை RDO ஆபிஸ்க்கு சென்று, தனிவட்டாட்சியர்/RDO வின் PA திருமதி.மலர்விழி அவர்களை பார்த்தேன். அவர் உனது பைல் இன்னும் கையெழுத்து ஆகவில்லை நாளைக்குவா, நாளைக்குவா என என்னை இவ்வளவு காலம் அலையவிட்டார். நான் 17.2.2021-ந் தேதி மதியம் 2 மணிக்கு மயிலாடுதுறை RDO ஆபிஸில் இருந்த புதிய RDO அவர்களை பார்த்து எனது உட்பிரிவு பட்டா பற்றி கேட்டபோது, அவர் என்னுடைய உட்பிரிவு பட்டா ஆணையில் கையெழுத்து போட்டுவிட்டதாகவும், PA விடம் இருக்கிறது, PA ஸ்ட்ரைக்கில் இருக்கிறார், ஸ்ட்ரைக்கில் இருந்தாலும் PA மதியம் வந்துவிடுவார் அவரிடம் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன்படி 17.2.2021-ந் தேதி மாலை சுமார் 3 மணியளவில் தனிவட்டாட்சியர்/RDO வின் PA திருமதி.மலர்விழி அவர்களை ஆபிஸில் பார்த்து எனது இடத்தின் உட்பிரிவு பட்டா மாற்றம் தொடர்பாக கேட்டபோது, அதற்கு மலர்விழி அவர்கள் என்னிடம் 20,000/- ரூபாய் கொடுங்கள் உங்களுடைய உட்பிரிவு பட்டா மாறுதல் ஆணையை RDO விடமிருந்து வாங்கிக் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். என்னிடம் தற்போது பணம் இல்லை ஆர்டரை கொடுங்கள் பணம் தருகிறேன் என்று சொன்னதற்கு, பணம் கொடுத்தால்தான் ஆர்டரை கொடுப்பேன் என்று சொல்லிவிட்டார். நான் அதன்பிறகு இன்று 23.2.2021-ந் தேதி மதியம் 2 மணிபோல மயிலாடுதுறை RDO ஆபிஸ்க்கு சென்று தனிவட்டாட்சியர்/ RDO வின் PA திருமதி.மலர்விழி அவர்களை பார்த்து எனது இடத்தின் உட்பிரிவு பட்டா மாற்றம் தொடர்பாக கேட்டதற்கு மலர்விழி அவர்கள் நான் கேட்ட பணம் 20,000/- என்னாயிற்று என்று கேட்டார். நான் அதற்கு என்னிடம் அவ்வளவு பணம் இல்லை கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று சொன்னதற்கு நீ இப்படி சொல்வதால்தான் உனக்கு உட்பிரிவு பட்டா மாற்றம் ஆகவில்லை, உனக்கு பின்னால் மனுக்கொடுத்த திருமேனிக்கு பட்டா டிரான்ஸ்பர் ஆர்டர் வாங்கிக் கொடுத்துவிட்டேன். நான் கேட்ட பணத்தை கொடுத்தால்தான் உட்பிரிவு பட்டாவை தருவேன், பணம் கொடுக்கவில்லை என்றால் சீர்காழியில் தனி RDO ஆபிஸ் வந்துவிட்டது, நான் பைலை சீர்காழி RDO ஆபிஸ்க்கு அனுப்பிவிடுவேன், நீ மறுபடியும் ஆரம்பித்திலிருந்து அலையவேண்டிவரும், நான் உன்னுடைய பைலை அனுப்பாமல் இருக்கவேண்டும் என்றால் நாளை காலை என்னுடைய வீட்டுக்கு பணத்துடன் வா நான் உன்னுடைய ஆர்டரை தருகிறேன் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். நான் வேறுவழியில்லாமல் சரி தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மயிலாடுதுறை தனிவட்டாட்சியர்/RDO வின் PA திருமதி.மலர்விழி அவர்கள் என்னிடம் உட்பிரிவு பட்டா மாற்றம் செய்ய லஞ்சமாக கேட்ட ரூபாய் 20,000/- த்தை மலர்விழி அவர்களிடம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்ட திருமதி.மலர்விழி அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க நாகப்பட்டினம் லஞ்ச ஒழிப்புதுறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, ரூபாய் 20,000/- த்தை எடுத்துக்கொண்டு வந்து இன்று 23.2.2021-ந் தேதி இந்தப் புகாரை கொடுக்கிறேன். எனக்கு உட்பிரிவு பட்டா மாற்றம் செய்வதற்கு ரூபாய் 20,000/- லஞ்சம் கேட்ட மயிலாடுதுறை

தனிவட்டாட்சியர்/RDO வின் PA திருமதி.மலர்விழி அவர்களின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் தரங்கம்பாடி தாசில்தார் மற்றும் மயிலாடுதுறை RDO அவர்களின் உட்பிரிவு பட்டா மாற்றம் தொடர்பான கடிதங்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு (தமிழில் ஒப்பம்) K.மனோகரன். 23/2/2021 **SUBMITTED** Sir, Received this computer typed written complaint from the complainant with annexure on 23.02.2021 at 18.00 hours, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 23.02.2021 at 19.30 hours in Nagapattinam Vigilance and Anti-Corruption Detachment **Crime No.4/2021**, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.

**(M.ARULPRIYA)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam. 23/02/2021

I am submitting the Original F.I.R, along with the complaint with annexure to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Nagapattinam and the copies of the F.I.R. to all other concerned Officials.

**(M.ARULPRIYA)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam. 23/02/2021